RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2048

OPEN ACCESS

# ஆசாரக்கோவை உணர்த்தும் சான்றோர் அறநெறி

## க. இரமேஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, சமூக அறிவியல் மற்றும் மனிதநேய பள்ளி, தமிழ்நாட்டு மத்தியப் பல்கலைக்கழகம், நீலக்குடி வளாகம், திருவாரூர்-610005, இந்தியா

# The moral qualities of savants that the 'Acharakkovai' conveys

## G. Ramesh [a, *]

[a] Department of Tamil, Central University of Tamil Nadu, School of Social Science and Humanities, Neelakudi, Thiruvarur – 610005, India

* Corresponding Author: rameshg@cutn.ac.in

Received : 30-04-2020
Accepted : 08-09-2020

Check for updates

**ABSTRACT**

Acharakkovai is a poetic work which expounds the essential morals for the human life development. Acharakkovai is one among the eighteen Tamil works that deals with ethics and morals. This book shows the moral behaviour of the creatures living around, even if they are not depraved. We learn something from habits, just like we learn from others how to eat food for protection, how to build a good character from elders and so on. Thus the text Acharakkovai gives a clear idea about how to lead a life.

**Keywords:** Acharakkovai, Morals, Behaviour, Ethics

## முன்னுரை

மனிதராய்ப் பிறந்தவர் மற்றவரை மதிக்கும் மாண்புடையவராய் இருக்க வேண்டும். மனத்தில் கருணையும், அருளும், அன்பும், பணிவும் இருக்க வேண்டும். அவர்களே மற்றவர்களால் போற்றப்படுவர் என்று மனிதனுக்கு இருக்க வேண்டிய உயர் பண்புகளை உரைக்கிறது.

சான்றோர் தீமை செய்பவர் திறத்தினை நேரில் கண்டு அதனை நன்கு ஆய்ந்தறிந்த பின்னரே அவருக்கு அறிவுரை கூறுவர். நல்லனவற்றைக் கூறுவதற்குச் சான்றோர்கள் ஒரு போதும் அஞ்சுவதில்லை. அறம், பொருள் ஒழுக்கத்தில் வழுவாமல், தமது தகுதியையும் நோக்கிக் கண்ட பின்னரே செயலில் ஈடுபடுவர். இதுவே அவர்க்குரிய சிறந்த ஒழுக்கமாகும்.

## சான்றோர் அறம்

சான்றோர்கள் அறநெறியினைக் கடைப்பிடித்து அதன்வழி ஒழுகினர். கல்வி கேள்விகளால் சிறந்து அமைதியான கொள்கை உடையவர்களாக விளங்கினர். செல்வம் இழந்த போதும் சான்றோர் தமக்குற்ற குறையைச் சுற்றத்தவருக்கோ அன்றிப் பிறருக்கோ வாய்விட்டுக் கூறாத நாகரிகம் பெற்றிருந்தனர். உலகிற்கு நல்ல நெறிகளை வகுத்துக் காட்டும் இவர்களேயாவர். பிறர் தீமை செய்தால் அவர்களுக்குப் பொறுமையாய் நன்மையே

செய்யும் இயல்பினராவர். அறத்தால் நல்லிசை பெறக் கருதிய பிறருக்கு ஈந்து இன்பம் காண்பதைப் பேறாகக் கருதினர். செய்யத்தக்க அறங்களைச் செய்யாது விடுத்தல் பழியாகும் என்பதைக் கருத்தில் கொண்டன. திறமையுடையோர் செய்யும் வினைகள் அறத்தொடு பொருந்தியனவாகவே இருக்கும் எனக் கண்டனர்.

'சால்பு, சான்றாண்மை என்பது இனக்குழுச் சமூகத்தில் வேட்டை - பாதீடு என்றும், வீரயுகத்தில் வீரம், மறம் என்றும், மூவேந்தராட்சியில் உயர்ந்தோரின் அறம் என்றும் மாற்றமடைந்து வந்தது. அது நாகரிக சமூகத்தில் உயர் விழுமியமாகப் போற்றப்பட்டது. மிகுந்த உரிமையும் உடைமையும் ஆதிக்கம் பெற்றவர்களின் அற இலட்சியமாகப் புனைந்து சூடப்பட்டது. அறங்களின் குவிமையமாகச் சான்றாண்மை விதந்து ஓதப்பட்டது. சான்றாண்மை மிக்கோர், அறவோர், பெரியோர், மூத்தோர் என்றழைக்கப்பட்டார்கள். சங்க இலக்கியத்தில் சான்றோன் என்றால் வீரன் என்றும், அறங்கள் மிக்கவன் என்றும் இருநிலைகளும் வந்துள்ளன. உயர் அறங்களைக் கொண்டவன் என்ற பொருளில் 'சான்றோன்' என்ற சொல் அதிகம் வழங்கியது என்கிறார் ராஜ்கௌதமன்.

"மன்றத்து நின்றுஞற்றார் மாசு திமிர்ந்தயங்கார்

என்றும் கடுஞ்சொல் உரையார் இருவராய்

நின்றுழியும் செல்லார் விடல்" (Nachinarkiniyar, 1899)

இருவர் மட்டும் பேசிக்கொண்டிருக்கையில் குறுக்கே செல்லக்கூடாது, மற்றவர் அறியக்கூடாது என்ற மனித நாகரிக மாண்பினைச் சொல்லும் அறிவுரையாக ஆசாரக்கோவை கூறுகிறது.

## ஒழுக்கம்

ஒழுக்க வாழ்வின் உயர்ந்த நிலை யாதெனின் நல்லொழுக்கத்தைக் கடைபிடிப்பதும் தீயொழுக்கத்தை வெறுப்பதும் ஆகிய பண்புகளை மானிடச் சமூகம் அடைய முற்படுவதாகும். மனிதன் நலமாக வாழ்வதற்கும், அவன் வாழ்வில் இன்பத்தை அடைவதற்கும், கடைபிடித்து ஒழுகவேண்டிய நல்ல பழக்கவழக்கங்களையும், தீயவை என்று கடிந்து ஒதுக்கவேண்டிய செய்முறைகளையும் அறிந்து, நல்லனவற்றை மட்டும் பின்பற்றி ஒழுகுவதே அறமெனப் போற்றப்படுகிறது. ஒழுக்கம் மக்கள் உயிருக்கு உறுதி பயக்கும் சிறப்புடையது என்றும் அத்தகைய சிறப்புடைய ஒழுக்கமே அறம் எனப் போற்றப்படுகிறது.

கல்வி அறிவை விட சிறந்தது ஒழுக்கமாகும். எத்தனை இடையூறுகள் நேர்ந்தாலும் ஒழுக்கத்தைக் கடைபிடித்தல் வேண்டும். வாழ்க்கையில் எதை இழந்தாலும் ஒழுக்கத்தை இழத்தல் கூடாது என்று திருக்குறள் தொடங்கி ஆசாரக்கோவை, முதுமொழிக்காஞ்சி, கொன்றை வேந்தன் ஆகியவற்றின் கருத்துக்கள் பிற்கால நூல்களிலும் இடம் பெறுகின்றன.

கல்வியில் சிறந்திருப்பதைவிட ஒழுக்கத்தில் சிறந்திருப்பது நல்லது

"ஆர்கலி உலகத்து மக்கட்கு எல்லாம்

ஓதலின் சிறந்தன்று ஒழுக்கம் உடைமை" (Selvakesavaraya Mudaliar, 1919)

என முதுமொழிக்காஞ்சி கூறுகிறது.

அறநூல்கள் எடுத்துரைக்கும் நெறிமுறைகளைத் தெரிவு செய்து நல்லொழுக்கத்துடன் நடந்து கொள்ளுதல் வேண்டும் என்பதை,

"நூல்முறை தெரிந்து சீலத்து ஒழுகு" (Arumuka Navalar, 1914a)

எனக் கொன்றை வேந்தன் கூறுகிறது.

நான்கு வகை வேதங்களை நன்கு கற்றறிந்தும் அறிவும், ஒழுக்கமும் இல்லை என்றால் யாரும் அவரை மதிப்பதில்லை என்பதை,

"ஞானமா சார நயவா ரிடைப்புகழும்

ஏனைநால் வேத மிருக்குநெறி - தான்மொழியிற்

பாவநிறை சண்டாளர் பாண்டத்துக் கங்கைநீர்

மேவுநெறி யென்றே விடு" (Manivasagam Pillai, 1925)

என ஒழுக்கத்தின் சிறப்பை நீதிவெண்பா விளக்குகிறது.

ஒவ்வொரு மனிதனும் தன்வாழ்க்கையில் ஒழுக்கம் தவறாமல் வாழ வேண்டும் என்பதை,

"நேர்பட ஒழுகு" (Arumuganavalar, 1914b)

என ஔவையார் தம் நூலில் கூறுகிறார்.

பக்தியின் அடிப்படையில் அவரவர் விரும்பும் தெய்வத்தை வணங்குதல் நம்முடைய மனச்செருக்கை அடக்கும் ஒரு சிறந்த நெறியாகும். காலையில் எழுந்தவுடன் பல்துலக்கிச் சுத்தம் செய்து தாம் வணங்கும் தெய்வத்தைத் தாம் அறியும் நெறியால் வணங்குதல் சிறந்த ஒழுக்கமாகும்.

"நாளந்தி கோல்தின்று கண்கழீஇத் தெய்வத்தைத்

தானறியும் ஆற்றால் தொழுதெழுக அல்கந்தி

நின்று தொழுதல் பழி" (Nachinarkiniyar, 1899)

மேலும்,

"பிறப்பு நெடுவாழ்க்கை செல்வம் வனப்பு

நிலக்கிழமை மீக்கூற்றம் கல்விநோய் இன்மை

இலக்கணத்தால் இவ்வெட்டும் எய்துப என்றும்

ஒழுக்கம் பிழையா தவர்" (Nachinarkiniyar, 1899)

நல்லகுடியில் பிறத்தல், நீண்டநாள் வாழ்க்கை, செல்வம், உடலின் தோற்றப் பொலிவு, நிலஉரிமை, பாராட்டு, கல்வி, நோய் இன்மை போன்றவை ஒழுக்கம் தவறாமல் வாழ்பவர், மேற்கூறப்பெற்ற எட்டுப் பேறுகளையும் பெறுவர்.

## கல்வி

கல்வி என்பது மனித சமூகத்தை மேம்படுத்தும் கருவியாகவும், வாழ்க்கை நெறிப்படுத்தக் கூடிய ஒன்றாகவும் திகழ்கிறது. பண்டைக் காலந்தொட்டுக் கல்வியை மிக இன்றியமையாததாய்ச் சான்றோர்கள் வலியுறுத்தியவர்கள். சங்க காலத்தில் கல்வி பற்றிப் பேசப்பட்டிருக்கிறது. குலக்கல்வியும், வேள்வி, கணிதம், வானியல் போன்ற கலைகளும்

கற்றுக்கொடுக்கப்பட்டன. பழங்காலத்தில் சமூகத்தில் கற்றறிந்தார்க்கு மிகுந்த மதிப்பு நிலவி இருக்க வேண்டும். அறிவில் சிறந்தவர்களைச் சமுதாயம் மதிப்புடையவர்கள் என அவர்களுக்குத் தனிச் சிறப்பைக் கொடுத்துள்ளனர். சங்ககால இலக்கியங்களிலும், இலக்கணங்களிலும் கல்வி கற்பதற்கான காலத்தைப் புலவர்கள் வரையறுத்துள்ளனர். அவர்கள் கல்விக்கு மூன்று ஆண்டுகள் மட்டுமே போதுமானதாக வரையறுத்துள்ளனர். கல்வி பயில்வதற்கு மூன்று ஆண்டு என்று எல்லை வரையறுக்கப்பட்டது. எல்லை வகுத்த தன்மையினைத் தொல்காப்பியத்தில்,

"வேண்டிய கல்வி யாண்டு மூன்றிறவாது" (Nachinarkiniyar, 1993)

என அக்காலத்துத் தலைமகன் கல்விநிமித்தம், தலைமகளைப் பிரிந்து சென்ற உண்மையை நேரடியாகக் கூறியுள்ளது.

பொய், கோள் சொல்லுதல், பிறர் பொருளைப் பிடுங்கிக் கொள்ளுதல், பிறர் ஆக்கம் கண்டு பொறாமை கொள்ளுதல் என்பதை,

"பொய்குறளை வெளவல் அழுக்கா றிவைநான்கும்

ஐயம்தீர் காட்சியார் சிந்தியார் சிந்திப்பின்

ஐயம் புகுவித்து அருநிரயத் துய்த்திடும்

தெய்வமும் செற்று விடும்" (Nachinarkiniyar, 1899)

இவை நான்கினையும் ஐயமறக் கண்டு தெளிந்தவர் நினைக்கவும் மாட்டார். நினைத்தால் அவரைப் பிச்சை எடுக்கும்படி செய்வதோடு மோசமான நரகத்திலும் தள்ளும். அத்துடன் கைகொடுக்கும் தெய்வமும் சினம் கொண்டு அவரைக் கைவிட்டு ஒதுங்கும்.

கற்றவர் கண்ட நெறிகளாக ஆசையைத் துறந்தவரைப் பேணிப் பாதுகாத்தல், தகாத செய்ய நாணுதல், தான் கற்றதை மறந்தும் குரவர் முன் சொல்லாமை என்பதை,

"துறந்தாரைப் பேணலும் நாணலும் தாங்கற்ற

மறந்தம் குரவர் முன் சொல்லாமை மூன்றும்

திறங்கண்டார் கண்ட நெறி" (Nachinarkiniyar, 1899)

ஆகிய மூன்றும் நல்லமுறைகளைக் கண்டவர் பின்பற்றும் வழிகளாகும்.

கல்வி கற்பதற்காகச் செல்லும் தலைமகன் தலைமகளை அழைத்துச் செல்லவில்லை என்பது புலனாகிறது. கல்வி கற்பதற்காக மூன்று ஆண்டுக் காலம் தலைவியை விட்டுப் பிரிந்து இருந்தனர் என்பதனைத் தொல்காப்பியர் கூறும் இலக்கியம் மூலம் அறிகிறோம்.

கல்வியினால் பெறும் உறுதிப் பொருளைக் கூறுகிறது.

"உற்றுழி உதவியும், உறுதிபொருள் கொடுத்தும்

கீழ்ப்பால் ஒருவன் கற்பின்,

மேற்பால் ஒருவனும் அவன்கண் படுமே" (Puliyur Kesigan, 2010)

என்னும் அடிகளில் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியைப் பாடுகிறார். ஒரு தாய் வயிற்றில் பிறந்தவருள், அவரவர் பெற்ற கல்விச் சிறப்பின் காரணமாகத் தாயும் பாசத்தால் மனம் வேறுபடுவாள். ஒரு குடியில் பிறந்த பலருள் மூத்தோனை வருக என்று அழைக்காமல், அவருள் அறிவுடையோனை வருக என்று அழைப்பார்கள். அவன் காட்டும்

நெறி வழியே அரசனும் நடப்பான். வேற்றுமை தெரிந்த நாற்குல மக்களுள், கீழ்க்குலத்துள் ஒருவன் கற்று வல்லவனாயின் மேற்குலத்துள் ஒருவனும், இவன் கீழ்க்குலத்தான் என்று பாராது, கல்விப் பொருட்டு அவனிடத்துச் சென்று வழிபடுவான். ஆதலால் எவ்வகையிலும் கல்வி கற்றல் சிறப்புடையது என்று கல்வி கற்றலின் மேன்மையைப் பாடுகிறார்.

கல்வி என்பது எப்பொழுதும் நிலைத்த தன்மை உடையது. கல்வி நம் வாழ்வுடன் ஒன்றி இருப்பதால் எப்பொழுதும் அறிவை பெருக்கும். மக்களின் அக இருளைப் போக்கும். சங்க காலத்தில் கல்வி என்பது ஒருவன் கலைகளை அறிந்து கொள்வதற்கும் நற்பண்பின் உறைவிடமாய் வாழ்வதற்கும் உறுதுணையாய் இருந்துள்ளது.

## தகாதவை (தீமை)

நன்னெறிகளைக் கூறும் ஆசாரக்கோவை விலக்கக்கூடியன எவை என்பதையும் கூறுகிறது. பிறர் மனை நயத்தல், கள்ளுண்ணல், களவு செய்தல், கொலைசெய்தல், சூதாடல் போன்றவை இகழ்ச்சிக்கும், நரகத்திற்கும் காரணமான செயல்கள் ஆகும். எனவே விலக்க வேண்டியன என்று வலியுறுத்துகிறார் ஆசிரியர்.

"பிறர்மனை கள்களவு சூது கொலையோ

டறனறிந்தார் இவ்வைந்தும் நோக்கார் திறனிலரென்

றெள்ளப் படுவதூஉம் அன்றி நிரயத்துச்

செல்வுழி உய்த்திடுத லால்" (Nachinarkiniyar, 1899)

பிறன் மனைவி, கள், களவு, சூது, கொலை ஆகிய ஐந்தையும் அறநெறி அறிந்தவர் நினைக்கவும் மாட்டார். நினைத்துச் செய்தால் திறன் இல்லாதவர் என்று இகழப்படுவர். அன்றியும் இச்செயல்கள் ஒருவனை நரக உலகுக்குக் கொண்டு செல்லும்.

மேலும்,

"பொய்குறளை வெளவல் அழுக்கா றிவைநான்கும்

ஐயம்தீர் காட்சியார் சிந்தியார் சிந்திப்பின்

ஐயம் புகுவித்து அருநிரயத் துய்த்திடும்

தெய்வமும் செற்று விடும்" (Nachinarkiniyar, 1899)

பொய், கோள் சொல்லுதல், பிறர் பொருளைப் பிடுங்கிக் கொள்ளுதல், பிறர் ஆக்கம் கண்டு பொறாமை கொள்ளுதல் இவை நான்கினையும் ஐயமறக் கண்டு தெளிந்தவர் நினைக்கவும் மாட்டார். நினைத்தால் மோசமான நரகத்திலும் தள்ளும். அத்துடன் கைகொடுக்கும் தெய்வமும் சினம் கொண்டு அவரை கைவிட்டு ஒதுங்கும்.

"உடம்பு நன்றென் றுரையார் ஊதார் விளக்கும்

அடுப்பினுள் தீநந்தக் கொள்ளார் அதனைப்

படக்காயார் தம்மேல் குறித்து" (Nachinarkiniyar, 1899)

பேசிக்கொண்டிருக்கும் ஒருவரைப் பார்த்து உன் உடம்பு நன்றாக இருக்கிறது என்று சொல்லக்கூடாது. விளக்கை வாயால் ஊதி அணைக்கக்கூடாது, சமையலறையில் எரியும்

அடுப்பில் தீ அவியும்படி பிறர் நெருப்பு எடுத்துச் செல்லக் கூடாது. சமைக்கும் அடுப்பில் தம் உடம்பைக் குறித்து குளிர் காயக்கூடாது.

## முடிவுரை

அறம் என்ற தமிழ்ச்சொல் மனித வாழ்வின் அடிப்படை ஒழுக்கத்தைக் குறிப்பதாகும். அறம் என்ற சொல்லைக் குறிப்பதற்கு இயற்கை நீதி, இயற்கை விதி, இயற்கை நெறி என்ற சொற்களே பயன்படுகின்றன. அறம் என்பது தனி மனிதனுக்காக உருவாக்கப்பட்டது அல்ல. இருவர் அல்லது பலருக்கு இடையே சமூக உறவுகள் நிலவுகிற போதுதான் அறம் தலைக்காட்ட முடியும் எனக் குறிப்பிடுவர். ஒழுக்கம் என்பது மனிதன் நன்னெறியில் இடையறாது ஒழுகுவதே அறமாகும். வாழ்க்கையில் உயர்ந்தவையெனக் கருதப்படும் நெறிமுறைகள் எக்காலத்தும் எந்தச் சூழலிலும் இடைவிடாது மேற்கொண்டு அதன் படி நடத்தல் வேண்டும் என்பதைச் சுட்டுகிறது. சமூக முன்னேற்றத்திலும் நாகரிக வளர்ச்சியிலும் ஆர்வமுடைய சான்றோர்கள் ஒழுக்கத்தையே அவற்றை அடைவதற்குரிய நெறியாக வற்புறுத்தி வந்துள்ளார்கள். அதாவது நம்முடைய முயற்சியால் எழுகின்ற செயல்களுக்கும் அறநியதிக்கும் உள்ள இணக்கம் அல்லது இணக்கமின்மையாகும் என்று குறிப்பிடுகின்றனர். சான்றோர்கள் அறநெறியினைக் கடைப்பிடித்து அதன்வழி ஒழுகி அறிவுரை கூறுவர். இவர்களைச் சான்றாண்மை மிக்கோர், அறவோர் பெரியோர் மூத்தோர் என்றழைக்கப்பட்டார்கள். சங்க இலக்கியத்தில் சான்றோன் என்றால் வீரன் என்றும், அறங்கள் மிக்கவன் என்றும் இருநிலைகளும் வந்துள்ளன. கல்வியின் நோக்கம் நல்லொழுக்கம் பெறுதலே ஆகும். கல்வி கற்றவர்கள் ஒழுக்கத்துடன் வாழ்ந்தால் தான் அவர்களைச் சுற்றி இருக்கும் மக்களும் ஒழுக்கத்தோடு வாழ்வார்கள் என்பதை வலியுறுத்தியே கல்வியில் ஒழுக்கம் வற்புறுத்தியுள்ளனர் எனக் கொள்ளலாம். ஒரு தீமை தொடர்ந்து பல தீமைகளுக்குக் காரணமாகிறது. பொய் பேசுதல், கோள் சொல்லுதல், பிறர் பொருளுக்கு ஆசைப்படல், பொறாமை கொள்ளுதல் என இவை நான்கினையும் நினைக்கவும் கூடாது. நினைத்தால் இம்மையில் பிச்சையெடுக்கும்படி வறுமை வரும். மறுமையில் நரகத்தில் செலுத்திவிடும் என்று கூறி மக்களை நல்வழிப்படுத்துகிறது. ஒருவன் பேச்சு எப்படி இருக்க வேண்டும்? வஞ்சனையின்றி இருக்க வேண்டும். பயன் உடையதாய் இருக்க வேண்டும். எப்படி இருக்கக் கூடாது? ஒருவன் பேசும் மொழி வஞ்சனையாய் இருக்கக் கூடாது. பயனற்ற சொல்லாய் இருக்கக் கூடாது. நாவடக்கமின்றிப் பேசுதல் கூடாது. பிறரைப் பழித்துரைக்கக் கூடாது. நிலையான நல்லொழுக்கம் உள்ளவர் செயலாக இவற்றைச் சொல்கிறது ஆசாரக் கோவை.

## References

Arumuka Navalar (1914a) Kondrai Vendan, Vidyanupalanayandarasalai, Chennai, Tamil Nadu, India

Arumuka Navalar (1914b) Athichudi, Vidyanupalanayandarasalai, Chennai, Tamil Nadu, India.

M. Manivasagam Pillai, (1925), Neethi venba, Mataras Robban Acciyantiracalai, Chennai, Tamil Nadu, India

Nachinarkiniyar (1899), Asara Kovai, Sri Krishna Vilas Press, Thanjavur, Tamil Nadu, India

Nachinarkiniyar (1993) Tholkappiyar, Saraswathi Mahal Library, Thanjavur, Tamil Nadu, India

Puliyur Kesigan (2010) Purananuru, Saratha Pathippagam, Chennai, Tamil Nadu, India.

T. Selvakesavaraya Mudaliar (1919), Mudhumozhi Kanchi, S.B.C.K. Printer, Chennai, Tamil Nadu, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License